# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : திரு. **மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 08 /பேரூ/2026**
**நாள் : 14.05.2026**

1. S. முத்துவீரப்பன்,
2. S.M.S. சிவனாண்டி,
   காமயகவுண்டன்பட்டி,
   தேனி மாவட்டம்.

– முறையீட்டு மனுதாரர்கள்

செயல் அலுவலர்,
காமயகவுண்டன்பட்டி பேரூராட்சி,
தேனி மாவட்டம். - எதிர் மனுதாரர்

தேனி மாவட்டம், காமயகவுண்டன்பட்டி, 172/W-4, வேதகோவில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. எஸ். முத்துவீரப்பன் மற்றும் தேனி மாவட்டம், காமயகவுண்டன்பட்டி, மேட்டுப்பட்டி தெரு, வார்டு 9 என்ற முகவரியில் வசிக்கும் திரு. S.M.S. சிவனாண்டி ஆகியோர்களின் **31.12.2025** நாளிட்ட ஒரே மாதிரியான மனுக்கள் இம்முறைமன்ற நடுவத்தில் **02.01.2026** அன்று பெறப்பட்டு, 08/பேரூ/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர்களின் மனுக்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தேனி மாவட்டம், காமயகவுண்டன்பட்டி, 172/W-4, வேதகோவில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் மனுதாரர் திரு. எஸ். முத்துவீரப்பன் மற்றும் தேனி மாவட்டம், காமயகவுண்டன்பட்டி, மேட்டுப்பட்டி தெரு, வார்டு **9** என்ற முகவரியில் வசிக்கும் திரு. S.M.S. சிவனாண்டி ஆகியோர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த **31.12.2025** நாளிட்ட ஒருமித்த புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளனர்:

“தேனி மாவட்டம், காமயகவுண்டன்பட்டியில் செயல்பட்டு வரும் “தேனி மாவட்ட நுகர்வோர் மற்றும் லஞ்சம் & ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு அமைப்பானது” பொதுமக்கள் நலன் கருதி செயல்பட்டு வரும் அமைப்பாகும்.

காமயகவுண்டன்பட்டி பேரூராட்சியில் வசிக்கும் பொதுமக்களின் நலன் கருதியும், டெங்கு கொசு தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும், தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவின்பேரில் டெங்கு மஸ்தூர் பணியாளர்களாக பணியாளர்கள் தற்காலிக அடிப்படையில் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தற்காலிக அரசுப் பணியாளர்களாக உள்ள நிலையில், அரசுப் பணியாளர்களின் சட்ட ஒழுங்குமுறை விதிகளின்படி எந்தவொரு அரசியல் கட்சியிலும் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளக் கூடாது என்ற நிலையில், ஆளும் கட்சியின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்கத்தோடும், அரசிற்கு அவப்பெயரை உருவாக்கும் நோக்கத்தோடும், அரசின் திட்டத்தினை சீர்குலைக்கும் நோக்கத்தோடும், டெங்கு மஸ்தூர் தற்காலிக பணியாளரான சிவக்குமார் என்பவரின் மனைவி திருமதி. சாவித்திரி என்பவர் டெங்கு கொசு தடுப்பு நடவடிக்கைக்கான பணியினை மேற்கொள்ளாமல், சட்ட விரோதமாக அரசியல் கட்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளதுடன், தன்னுடன் பணிபுரியும் பணியாளரையும் சேர்த்து அரசியலில் ஈடுபடுத்த முயன்று வருகின்றார். இதனால் பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய பணிகள் தடைபடுவதுடன், பேரூராட்சி நிர்வாகத்தின் நற்பெயருக்கும் பாதகம் ஏற்படுகிறது. திருமதி. சாவித்திரி தன்னை கட்சியில் இணைத்துக் கொண்டு, கட்சிப்பணி செய்து வருவது தொடர்பாக, பேரூராட்சி அருகில் உள்ள ஆரம்ப சுகாதாரம் நிலையம் எதிரில் பெரிய அளவில் அமைக்கப்பட்டுள்ள பிளக்ஸ் பேனரில் இவரது புகைப்படம் இடம் பெற்றுள்ளது.

மேலும் இவர் காமயகவுண்டன்பட்டி பேரூராட்சியில் சாலையோர வியாபாரியாகவும் இருந்து வருகிறார். அதற்கான அடையாள அட்டையின் நகல் தங்களின் மேலான பார்வைக்கு இணைக்கப்பட்டுள்ளது.

டெங்கு மஸ்தூர் தற்காலிக பணியாளரான திருமதி. சாவித்திரி என்பவர் டெங்கு கொசு தடுப்பு நடவடிக்கைக்கான பணியினை மேற்கொள்ளாமல், பகல் நேரங்களில் சாலையோரத்தில் தன்னுடைய சுயநலத்திற்காக வியாபாரம் செய்து சம்பாதிப்பதுடன், சட்ட விரோதமாக அரசியல் கட்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, அரசின் நிதியினை தவறான வகையில் சம்பளமாக பெறுவது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியும், இவர் மீது நடவடிக்கை எடுக்காத காமயகவுண்டன்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் திரு. ஏ. பஷீர் அகமது என்பவர் மீதும், பேரூராட்சி மன்றத் தலைவர் திரு. பி. வேல்முருகன் என்பவர் மீதும் உரிய நடவடிக்கை எடுக்க உயர் அலுவலர்களுக்கு பரிந்துரை செய்து, சம்பந்தப்பட்ட பணியாளரை உடன் பணி நீக்கம் செய்ய உத்தரவு பிறப்பிக்க வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளனர்.

2. முறையீட்டு மனுதாரர்களின் புகார் மனுக்கள் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 22.01.2026 நாளிட்ட அறிவிப்பின் மூலம் காமயகவுண்டன்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து எவ்வித அறிக்கையும் பெறப்படவில்லை.

3. எனினும், மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரரான காமயகவுண்டன்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு இம்முறைமன்றத்தில் 09.04.2026 அன்று நடைபெறவிருக்கும் விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் மற்றும் விரிவான அறிக்கையுடன் ஆஜராகுமாறு 20.03.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மனுதாரர்கள் திரு. எஸ். முத்துவீரப்பன் மற்றும் திரு. S.M.S. சிவனாண்டி ஆகியோர் 09.04.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்

முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தங்களது வாக்கு மூலத்தை அளித்துள்ளனர். அதில் –

- "தேனி மாவட்டம், காமயகவுண்டன்பட்டி பேரூராட்சியில் வசிக்கும் பொதுமக்களின் நலன் கருதியும் டெங்கு கொசு தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் வகையிலும் தேனி மாவட்ட ஆட்சித் தலைவரின் உத்தரவுப்படி 20 நபர்கள் தற்காலிக டெங்கு மஸ்தூர் பணியாளர்களாக பணியமர்த்தப்பட்டனர்.

- இவர்களில் தற்காலிக டெங்கு பணியாளரான திருமதி சாவித்திரி என்பவர் பேரூராட்சியில் தினந்தோறும் வருகை புரிந்ததாக சுகாதார மேற்பார்வையாளர் மற்றும் துப்புரவு பணி மேற்பார்வையாளர் இருவரிடமும் தெரிவித்துவிட்டு, டெங்கு பணி கொசு தடுப்பு பணிகளை மேற்கொள்ளாமல் விதிமீறி பகல் வேளையில் தன்னுடைய சுய நலத்திற்காக சாலையோரத்தில் பால், காய்கறிகள், பலசரக்கு பொருட்கள் போன்றவற்றை விற்பனை செய்து வருகிறார். இவ்வாறு வியாபாரம் செய்வதற்கான காமயகவுண்டன்பட்டி பேரூராட்சியிலிருந்து அடையாள அட்டையும் பெற்றுள்ளார். இதன்மூலம் தவறான முறையில் அரசு சம்பளம் பெற்று வருகிறார்.

- மேலும் அரசு பணியாளர்களின் நடத்தை விதிகளுக்கு முரணாக தற்காலிக டெங்கு மஸ்தூர் பணியாளரான திருமதி. சாவித்திரி என்பவர் தன்னை அரசியல் கட்சியில் ஈடுபடுத்திக்கொண்டு அரசுக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் நடந்து கொண்டு வருகிறார். மேற்காணும் சட்ட விரோத செயல்கள் குறித்து பேரூராட்சி செயல் அலுவலரிடம் முறையிட்டும், எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

- இவ்வாறு டெங்கு கொசு தடுக்கும் பணிகளை மேற்கொள்ளாமல் இருப்பதால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு சுகாதார சீர்கேடு ஏற்பட்டு வருகிறது. மேலும் அரசு விதிமுறைகளுக்கு முரண்பாடாக அரசு ஊழியர் ஒருவர் அரசாங்கத்திடம் சம்பளம் பெற்றுக்கொண்டும், அரசு சட்ட விதிமீறி வியாபாரம் செய்து வருவதால் அரசாங்கத்திற்கு பெரும் நிதியிழப்பு ஏற்பட்டு வருகிறது.

- எனவே மேற்காணும் அரசு விதிமுறைகளுக்கு முரணாக சாலையோர வியாபாரம் மற்றும் தனது சுயநலத்திற்காக அரசியல் கட்சியில் ஈடுபாடு கொண்டிருக்கும் திருமதி. சாவித்திரி என்பவரை தற்காலிக டெங்கு பணியிலிருந்து பணி நீக்கம் செய்யவும் அவர் முறைகேடாக இப்பணியில் பெற்ற ஊதியங்கள் திரும்பப் பெற்று, காமயகவுண்டன்பட்டி பேரூராட்சி நிதியில் திரும்ப செலுத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளனர்.

5. எதிர்மனுதாரரான காமயகவுண்டன்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் 09.04.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- "தேனி மாவட்டம், காமயகவுண்டன்பட்டி பேரூராட்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு சிறப்பு டெங்கு ஒழிப்பு மஸ்தூர் தூய்மைப் பணியாளர் நல

சங்கம் மூலமாக வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆணைப்படி தினக்கூலி ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ.490/- வீதம் 20 டெங்கு மஸ்தூர் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

➢ காமயகவுண்டன்பட்டி பேரூராட்சியில் டெங்கு மஸ்தூராக பணிபுரியும் 20 பணியாளர்கள் தினசரி காலை 7.00 மணிக்கு பேரூராட்சியில் தூய்மைப் பணி மேற்பார்வையாளரிடம் வருகையை பதிவு செய்து களப் பணிக்கு சென்றுவிடுவார்கள். ஒவ்வொரு வீடாக சென்று தொட்டியில் உள்ள லார்வா புழுக்களை அழிக்கும் பணியும், குளிர்சாதன பெட்டி பின்புறத்தில் தண்ணீர் தேங்காததை கண்காணிக்கவும், தேங்காய் சிரட்டை, பாட்டில் இவற்றை கண்காணிப்பது இவர்களுடைய பணிகளாகும். இவர்களுடைய பணிகளை பேரூராட்சியின் தூய்மைப் பணி மேற்பார்வையாளர் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலைய சுகாதார மேற்பார்வையாளர் கண்காணிப்பது கடமையாகும். இவர்களின் வேலை நேரமானது காலை 7.00 மணிமுதல் 11.00 மணிவரையிலும் , பகல் 2.00 மணிமுதல் 5.00 மணிவரை ஆகும். இவர்களுடைய பணிநேரத்தில் பணியை சரியாக செய்து முடித்து விடுகிறார்கள்.

➢ திருமதி. சாவித்திரி, டெங்கு மஸ்தூர் பணியாளர் சாலையோர வியாபாரிகளுக்கான அடையாள அட்டை உணவுப் பொருட்கள் விற்பனை செய்வதற்கான அடையாள அட்டை அப்போதைய செயல் அலுவலர் திரு. ஆறுமுக நயினார் என்பவரிடமிருந்து பெற்றுள்ளார். தற்போதைய செயல் அலுவலராகிய என்னால் மேற்காணும் சாலையோர வியாபாரிகளுக்கான அடையாள அட்டை வழங்கப்படவில்லை என்ற விவரத்தை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

➢ திருமதி. சாவித்திரி, டெங்கு மஸ்தூர் பணியாளர் என்பவர் தன்னை அரசியல் கட்சியில் ஈடுபடுத்தி கொண்டு பிளக்ஸ் பேனரில் அவருடைய புகைப்படம் இடம் பெற்றிருந்தது. அவரை நேரிடையாக செயல் அலுவலராகிய நான் விசாரணை செய்த போது அரசு பணியாளர் நடத்தை விதிகளுக்கு முரணாக நடந்துள்ளீர்கள். அதனால் தங்கள் மீது அரசு விதிகளின்படி நடவடிக்கை எடுக்கவுள்ளேன் என்று கூறினேன். அதற்கு அவர் என்னுடைய மாமனார் அரசியல் கட்சியில் வார்டு செயலாளராக உள்ளார். என்னுடைய அனுமதியில்லாமல் என்னுடைய புகைப்படத்தினை பிளக்ஸ் பேனரில் போட்டுள்ளார். புகைப்படம் இடம் பெற்றுள்ள விவரம் தற்போதுதான் தெரிய வருகிறது. இனி வருங்காலங்களில் இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படா வண்ணம் உறுதி அளிக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

➢ டெங்கு மஸ்தூர் பணியாளர் திருமதி. சாவித்திரி என்பவரின் சாலையோர பணியாளர் அடையாள அட்டையினை ரத்து செய்து, அரசு விதிகளின்படி திருமதி. சாவித்திரி என்பவர் மீது மேற்காணும் புகார்கள் குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான காமயகவுண்டன்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 09.04.2026 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 43/2026ல் மனுதாரர்களின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு தனது விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார். அதில் –

“தேனி மாவட்டம், காமயகவுண்டன்பட்டி பேரூராட்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு சிறப்பு டெங்கு ஒழிப்பு மஸ்தூர் தூய்மை பணியாளர் நல சங்கம் மூலமாக வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆணைப்படி தினக்கூலி ஊதியம் நாள் ஒன்றுக்கு தொகை ரூ.490/- வீதம் 20 டெங்கு மஸ்துார் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

டெங்கு மஸ்துார் பணியாளராக பணிபுரியும் 20 பணியாளர்கள் தினந்தோறும் ஒவ்வொரு வீடாக சென்று லார்வா புழுக்களை அழிக்கும் பணியினை மேற்கொள்வார்கள். இவர்களது பணிகளை பேரூராட்சியின் தூய்மை பணி மேற்பார்வையாளரும், அரசு ஆரம்ப சுகாதார நிலைய மேற்பார்வையாளரும் கண்காணிப்பது கடமையாகும்.

டெங்கு மஸ்துார் பணியாளர் திருமதி. சாவித்திரி உணவு பொருட்கள் விற்பனை செய்வதற்காக சாலையோர வியாபாரிகளுக்கான அடையாள அட்டை அப்போதைய செயல் அலுவலர் திரு. சு. ஆறுமுகநயினாரிடமிருந்து பெற்றுள்ளார். தற்பொழுது செயல் அலுவலராகிய என்னால் சாலையோர வியாபாரிகள் அடையாள அட்டை வழங்கப்படவில்லை.

டெங்கு மஸ்துார் பணியாளர் திருமதி. சாவித்திரி என்பவர் தன்னை அரசியல் கட்சியில் ஈடுபடுத்திக் கொண்டு பிளக்ஸ் பேனரில் அவருடைய புகைப்படம் இடம் பெற்றிருந்தது குறித்து அவரை நேரடியாக விசாரணை செய்தேன். அப்போது அவர் என்னுடைய மாமனார் அரசியல் கட்சியில் வார்டு செயலாளராக உள்ளார். தன்னுடைய அனுமதி இல்லாமல் மாமனார் என்னுடைய புகைப்படத்தினை பிளக்ஸ் பேனரில் போட்டுள்ளார் என்று கூறினார்.

எனவே, டெங்கு மஸ்துார் பணியாளர் திருமதி. வி. சாவித்திரி என்பவரின் சாலையோர பணியாளர் அடையாள அட்டையினை ரத்து செய்து அரசு விதிகளின்படி மேற்காணும் புகார்கள் குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரர்களின் புகார் மனுக்கள், அவர்களது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான காமயகவுண்டன்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர்கள் திரு. எஸ். முத்துவீரப்பன் மற்றும் திரு. S.M.S. சிவனாண்டி ஆகியோர் தங்களது 31.12.2025 நாளிட்ட ஒருமித்த புகார் மனுவில் தேனி மாவட்டம், காமயகவுண்டன்பட்டி பேரூராட்சியில் தற்காலிக டெங்கு மஸ்துார் பணியாளராக பணிபுரியும் திருமதி. சாவித்திரி என்பவர் பேரூராட்சி பணிகளை மேற்கொள்ளாமல், விதிமீறி பகல் வேலையில் சாலையோரத்தில் வியாபாரம் செய்து வருவதாகவும் இதற்கான சாலையோர வியாபாரிகளுக்கான அடையாள அட்டை காமயகவுண்டன்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் வழங்கி உள்ளதாகவும் மற்றும் மேற்காணும் தற்காலிக பணியாளர் அரசியல் கட்சியில் தன்னை ஈடுபடுத்தி வருவதாகவும் புகாராக தெரிவித்திருப்பது அறிய முடிகிறது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகள், 1973 விதி 8 (1) (a)ல் எந்தவொரு அரசு பணியாளரும் முன் அனுமதியின்றி நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்தவொரு

வர்த்தகத்திலோ அல்லது தொழிலிலோ ஈடுபடவோ அல்லது எந்தவொரு வேலையையும் மேற்கொள்ளவோ கூடாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

Tamil Nadu Government Servant's Conduct Rules, 1973

Rule 8. Private Trade or Employment:

(1) (a) No Government servant shall except with the previous sanction of the Government engage himself directly or indirectly in any trade or business or undertake any employment;

மேற்காணும் விதி 8 (1) (a)ன் கீழ் அரசு பணியாளர் ஒருவர் வர்த்தகம் மற்றும் வியாபாரத்தில் ஈடுபடக்கூடாது என்ற நிலையில், காமயகவுண்டன்பட்டி பேரூராட்சியில் பணிபுரியும் தற்காலிக டெங்கு மஸ்தூர் பணியாளரான திருமதி. சாவித்திரி என்பவருக்கு சாலையோர வியாபாரிகளுக்கான அடையாள அட்டையானது அப்போதைய பேரூராட்சி செயல் அலுவலரால் வழங்கப்பட்டுள்ளது எனவும், அந்த அடையாள அட்டையினை ரத்து செய்து திருமதி. சாவித்திரி என்பவர் மீது அரசு விதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்திருப்பதை அவரது வாக்குமூலம் மற்றும் அவரின் அறிக்கை மூலம் தெரிய வருகிறது.

மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் நடத்தை விதிகள் 1973- விதி 14(1)ன் கீழ் எந்தவொரு அரசு பணியாளரும் எந்தவொரு அரசியல் கட்சியிலோ அல்லது அமைப்பிலோ உறுப்பினராகவோ அல்லது வேறுவிதமாக தொடர்புடையவராகவோ இருக்கக் கூடாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

Tamil Nadu Government Servants Conduct Rules, 1973

Rule 14, Taking part in politics and Elections and position of Government servants in relation to Elections:-

(1) No Government servant shall be member of or be otherwise associated with any political party or any organization in respect of which there is reason to believe that the organisation has a political aspect, nor shall be take part in, subscribe in aid of, or assist in any other manner any political movement or activities. He shall also not only maintain political neutrality but shall also appear to do so. He shall also avoid giving room for any suspicion that he is favoring any political party or any candidate in elections.

இந்நிலையில் தற்காலிக டெங்கு மஸ்தூர் பணியாளரான திருமதி. சாவித்திரி என்பவரின் புகைப்படம் அரசியல் கட்சி தொடர்புடைய பிளக்ஸ் பேனரில் இடம் பெற்றிருப்பது குறித்து அரசு விதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்திருப்பதையும் அவரின் அறிக்கை மற்றும் வாக்குமூலமாக அறிய முடிகிறது.

மேற்காணும் நிலையில், காமயகவுண்டன்பட்டி பேரூராட்சியில் தற்காலிக டெங்கு மஸ்தூர் பணியாளரான திருமதி. சாவித்திரி என்பவர் சாலையோர வியாபாரம் மேற்கொள்வதும் மற்றும் அரசியல் கட்சியில் ஈடுபடுத்தி கொண்டதும் தொடர்பாக பேரூராட்சி செயல் அலுவலர் தனது

அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி உரிய சட்ட விதிகளின் கீழ் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த விவரத்தினை பேரூராட்சி இயக்குநரகத்திற்கு இரு மாத காலத்திற்குள் அறிக்கையாக சமர்ப்பிக்குமாறும் காமயகவுண்டன்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு மே திங்கள் 14-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவம்

பெறுநர்

1. திரு. எஸ். முத்துவீரப்பன்,
   எண். 172/W-4, வேதகோவில் தெரு,
   காமயகவுண்டன்பட்டி, தேனி மாவட்டம் - 625 521.
2. திரு. S.M.S. சிவனாண்டி,
   வார்டு 9, மேட்டுப்பட்டி தெரு,
   காமயகவுண்டன்பட்டி,
   தேனி மாவட்டம் - 625 521.
3. செயல் அலுவலர்,
   காமயகவுண்டன்பட்டி பேரூராட்சி,
   தேனி மாவட்டம்.
4. பேரூராட்சிகளின் இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
5. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).(பெயரிட்ட உறையில்)
   பேரூராட்சிகளின் இயக்குநரகம், ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–28.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

19/5/26
செயலாளர்
19/5/26.